அமைச்சர் அவர்கள் பதில் கூறவில்லை. அதற்கான பதிலை அவர்கள் கூறும்படி நான் கேட்டுக் கொள்கிறேன். அத்துடன் கூட்டுறவு மில் அரசாங்கத்தின் நிர்வாகத்தில் இருக்கிறது. இந்த மில்லில் வசூலிக்க முடியவில்லை என்று அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். கூட்டுறவு மில் என்பது அரசாங்கத்தின் நிர்வாகத்தில் இருப்பதால், இதிலிருந்து வசூலிக்க முடியவில்லை என்பது வருத்தத்திற்கு உரியது; இதற்கான காரணத்தை அமைச்சர் அவர்கள் கூற முடியுமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவர் அவர்களே, நான் சொல்கிறபோது, இந்த செஸ் ஃபண்ட் என்பது தனித்தனியாக வரவிலே கணக்கு வைக்கப்படாமல் ஒரே ஃபண்டாக இருந்தது. தனித்தனியாக, மாவட்டத்திற்கு மாவட்டம் தனியாக கணக்கு வைக்கவேண்டும் என்று வந்திருக்கிறது என்றேன். ஆனால் ரூ. 25,000 தான் வட ஆற்காடு மாவட்டத்திற்குச் செலவு செய்யப்படுகிறது என்றால், வருவாயே இல்லாமல் செலவு செய்கிறோம் என்றால், அதை ஒரு மாவட்டத்தில் உள்ள சர்க்கரை ஆலையிலிருந்து வசூலிக்க வேண்டும் என்பதல்ல. முன்னால் கணக்கு பொதுவாக இருந்தது. இப்பொழுது தனித்தனியாக இருக்கிறது. ஒரு சர்க்கரை ஆலையிலிருந்து வசூலிக்கப்படுகிற செஸ் பணத்தை அந்த ஏரியாவிலே மட்டும்தான் செலவழிக்கவேண்டும் என்பதிலே நியாய மில்லை என்று சொல்வதிலே நியாயம் உண்டு.

MR. CHAIRMAN: Questions are over.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. அறிவிப்புகள்.

(1) ஆளுநரிடமிருந்து செய்தி.

MR. CHAIRMAN: I have received a message from the Governor of Tamil Nadu recommending to the Legislative Council the consideration of the Tamil Nadu Appropriation (Vote on Account) Bill, 1975.

(2) பேரவையிலிருந்து செய்திகள்.

MR. CHAIRMAN: I have also received a message from the Hon. Speaker, Legislative Assembly, transmitting a copy of the Tamil Nadu Appropriation (Vote on Account) Bill, 1975 (L. A. Bill No. 10 of 1975) as passed by the Assembly and signed by him for the recommendation of the Council and certifying that the Bill is a Money Bill within the meaning of Article 199 of the Constitution of India.

TRUTH ALONE TRIUMPHS

1975 மார்ச் 22] [Mr. Chairman]

I have further received messages from the Hon. Speaker, Legislative Assembly, transmitting copies of the following Bills as passed by the Assembly and signed by him for the concurrence, of the Council :

(1) The Tamil Nadu Indebted Agriculturists (Temporary Relief) Bill, 1975 (L.A. Bill No. 7 of 1975).

(2) The Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Amendment Bill, 1975 (L.A. Bill No. 49 of 1974).

3. 1974-75ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த இறுதி துணை விவர அறிக்கையை அளித்தல்

மாண்புமிகு டாக்டர் கருணாநிதி : மேலவைத் தலைவர் அவர்களே,

1974-75ஆம் ஆண்டிற்கான இறுதித் துணை மதிப்பீடுகளை இம் மன்றத்தின் முன் வைக்கிறேன். மானியக் கோரிக்கைகளை விளக்கும் விரிவான அறிக்கை இம்மன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ளது. மானியக் கோரிக்கைகளின் மொத்தத் தொகை 108.28 கோடி ரூபாயாகும். இதில் 55.87 கோடி ரூபாய் வருவாய்க் கணக்கிலும், எஞ்சிய தொகை கடன்—மூலதனக் கணக்குகளின் கீழும் அடங்கும். மொத்த மானியக் கோரிக்கைகளில் 107.36 கோடி ரூபாய் அனுமதித்த இனங்களின் கீழும், 92 இலட்சம் ரூபாய் சாட்டிய இனங்களின் கீழும் அமையும். இந்த மானியக் கோரிக்கைகளில் அடங்கியுள்ள முக்கிய செலவினங்கள் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன்.

2. வறட்சித் துயர் தணிப்புக்கு நாம் மேற்கொண்டுள்ள பணிகளுக்காக இந்தத் துணை மதிப்பீடுகளில் மொத்தம் 21.29 கோடி ரூபாய்ச் செலவுக்கு 40 ஆம் மானியத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மேற்பார்வையின் கீழ் 8.56 கோடி ரூபாய் செலவுக்கும் குடிநீர் வடிகால் நிறுவனத்தின் மூலம் 2 கோடி ரூபாய்ச் செலவுக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பல்வேறு வளர்ச்சிப் பணிகளுக்காகச் செய்யப்பட்டுள்ள நிதி ஒதுக்கங்களை, இயன்ற அளவுக்கு வறட்சிப் பகுதிகளில் துயர் தணிப்புப் பணிகளுக்காகச் செலவிட நாம் முடிவு செய்துள்ளதை மன்ற உறுப்பினர்கள் அறிவார்கள். அவ்வாறு செலவிடும்போது, வறட்சித் துயர் தணிப்புத் தலைப்பின் கீழ் அந்த நிதி ஒதுக்கங்கள் செலவாகக் காட்டப்படும். இதற்காகக் கணக்கு முறையில் அவையின் ஒப்புதலைப் பெறவும் இம் மானியத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. ஏறத்தாழ ஆறு இலட்சம் பேர்களுக்கு நாளொன்றுக்கு வேலையளிக்கும் வண்ணம் இப்பணிகள் தற்போது முனைப்பாகச் செயல்பட்டு வருகின்றன.

3. சமுதாயத்தில் எளிய நிலையிலும் நடுத்தர நிலையிலும் உள்ளவர்களுக்கு சீரான விலைகளில் உணவுப் பொருட்கள் கிடைக்கச் செய்வதற்காக நாம் மேற்கொண்டுள்ள கொள்முதல் முயற்சிகளுக்கென தமிழ்நாடு உணவுப் பொருள் வழங்கு நிறுவனத்திற்கு 15 கோடி ரூபாய்